ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2368/19 - 2024 ජනවාරි මස 23 වැනි අඟහරුවාදා - 2024.01.23
2368/19 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: AYDS/LND/01/ACQ/20.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல.: 4-3/15/2016/VE/481.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், அயகம பிரதேச செயலாளர் பிரிவில் குகுலு கோறளே பல்லே பற்று இல. 193 A, உடுகல கிராம அலுவலர் பிரிவில் உடுகல கிராமத்தில் அமைந்துள்ள இரத்தினபுரி நில அளவையாளர் அத்தியட்சகரின் பொறுப்பில் உள்ளது மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. R/AYG/2019/706 ஐக் கொண்ட வரைபடத்தில் இ.கி.வ. 239, தொகுதி இல. 3, தாள் இல. 01 இல் துண்டு இல. 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள புபுலேஹேனவத்தை / சிறிகந்துரேவத்தை (பயின்ஹில் வத்தை) எனும் 3.6588 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணியின் விபரம் :

தற்போதைய உரிமை கோருவோர் : அரசு

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அயகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சஞ்ஜீவனி கண்டம்பி,
பிரதேச செயலாளர்,
அயகம.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
அயகம,
2024, சனவரி 17.

EOG 01 - 0207



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*